# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 197/மா/2024**

**நாள்: 25.07.2025**

| | | |
|---|---|---|
| திரு. கோ. கோவிந்தராஜ்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 02.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு 197/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 02.09.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் சமூக செயற்பாட்டாளர். பொது மக்களுக்கான பொது பணிகளை சட்ட ரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருவதற்கான சான்றுகள் ஏராளமாக என்னிடம் உள்ளது. நான் வசிக்கும் வீட்டிலிருந்து சுமார் 500 மீட்டருக்கு பிறகு கதவு எண்.108 ஆர்யகவுடா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் VIJAYA COMPLEX என்ற வணிக வளாக கட்டிடம் சுமார் 10,000 சதுரடி என தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மொத்தம் 30,000 சதுரடியில் ஆர்யகவுடா ரோடு, ஜெய்சங்கர் தெரு இருபுற சாலைகளில் முன் பகுதிகள் அமைக்கப்பட்டு இவ்வணிக வளாகம் பார்கிங் வசதிகள் இல்லாமல் இயங்கி வருவதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகை படங்களில் காணலாம். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் இவ்வணிக வளாகம் கட்டிடத்தில் தரை தளத்தில் மேற்கு மாம்பலம் வெங்கடேஸ்வரா போளி சென்டர் என்ற ஓட்டல் துவக்கப்பட்டது. இவ்வோட்டல் கட்டிடம் அருகே அயோத்தியா மண்டபம் என்ற இந்து கோயில் வலது புறத்தில் சாய்பாபா கோயில் சுமார் 20 மீட்டர் தொலைவில் அஞ்சுகம் அரசு மேல்நிலைப்பள்ளி, சீத்தாராமன் வித்யாலாயா பள்ளி, G.R.T தனியார் பள்ளிகள் உள்ளது. அதிக போக்குவரத்து உள்ள இச்சாலையில் பார்க்கிங் வசதிகள் இல்லாமல் இவ்வோட்டல் துவக்கப்பட்டதால் அங்கு வரும் வாடிக்கையாளர்கள் நடைபாதையிலும் சாலையிலும்

வரிசையாக 100க்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்துவதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடங்களில் காணலாம். இதனால் பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் நடு சாலையில் நடந்து சென்று விபத்துக்கள் நேரிடுகிறது. அதிக போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதால் கோயிலுக்கு செல்லவும், பள்ளிக்கு செல்லவும் தாமதம் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். அருகில் வசிக்கும் மனுதாரராகிய நானும் பாதிக்கப்பட்டு வருகிறேன். ஒட்டல் உரிமையாளர் ஒட்டல் துவங்க முறையாக போக்குவரத்து காவல்துறையிடம் அனுமதி பெற்றாரா என்று ஆய்வு செய்து அங்கு பார்க்கிங் வசதிகள் அமைக்க போக்குவரத்து காவல் துறை உரிமையாளருக்கு நோட்டீஸ் அளித்து No Parking போர்டுகள் அமைக்க உத்தரவிட கோரி கடந்த 21.01.2023 அன்று போக்குவரத்து காவல்துறை கூடுதல் ஆணையர், உதவி ஆணையர், ஆய்வாளர், இவர்களுக்கு புகார்கள் அளிக்கப்பட்டது. மேலும், சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் உதவி வருவாய் துறை அலுவலர் அவர்கள் மேற்கண்ட ஒட்டலுக்கு வழங்கிய Licence-ஐ ரத்து செய்து பதிலளிக்க புகார் அளிக்கப்பட்டது. நடவடிக்கை பதில் இல்லை. போக்குவரத்து காவல் துறை R.T.I. அதிகாரி அவர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட புகார் மனுவுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த 02.03.2023 அன்று R.T.I. மனு அளிக்கப்பட்டது.

30.03.2023 அன்று அளிக்கப்பட்ட R.T.I பதில் மனுவில் அவ்வோட்டல் கட்டிட முன்பு No Parking போர்டுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், Parking வசதிகள் அமைக்க உரிமையாளருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வோட்டல் கட்டிடத்தில் தீ விபத்து நேரிட்டால் வாடிக்கையாளர்கள் உயிர் தப்பி வெளியேற இருபுற வழியும் இல்லை. தீ அணைப்பு கருவிகளும் பொருத்தப்படவில்லை. ஆகவே சட்ட விதிமுறைகளை மீறி இயங்கும் வணிகவளாக கட்டிடத்தை இடித்து parking வசதிகள் தீ அணைப்பு கருவிகள் இருபுற வழிகள் அமைக்கும் வரை செ.மா. வருவாய் துறை வழங்கிய Licenceயை ரத்து செய்ய Lock & Seal செய்ய உத்தரவிட கோரி தன்னல பொது நலன் கருதி கடந்த 07.04.2021 அன்று அனைத்து அதிகாரிகளுக்கும் புகார்கள் அளித்து இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் ஒட்டல் கட்டிடத்தை Lock and Seal Demolish செய்ய மேல்முறையீடு மனு அளிக்கப்பட்டுள்ளது.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 29.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் தனது கடிதம் மஅ10. ந.க. எண் 1500456/2025 நாள் 12.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்: அதில்

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கடை உரிமையாளருக்கு கடையில் உரிய வாகன நிறுத்தம் ஏற்படுத்துமாறும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தாமலும் நடைபாதையில் வாகனங்கள் ஏதும் நிறுத்தாமல் இருக்க வழிவகை செய்யுமாறும், தவறும்பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்து கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் வாகன நிறுத்துவதை தடுப்பதற்காக அங்கு காவல்துறையின் அறிவுரையின்படி No Parking Board நிறுவினார். மேலும் அங்கு வாகன நிறுத்தம் செய்வதை ஒழுங்குபடுத்தும் பொருட்டும் நடைபாதையினை பாதசாரிகள் தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி பயன்படுத்தும் வகையில் நிரந்தர

பணியாளர் ஒருவரை நியமித்து போக்குவரத்தினை சீரமைத்தார்கள் என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது. மேலும் கடையில் அமர்ந்து சாப்பிடும் வசதி இல்லை எனில் அங்கு வாகன நிறுத்த வசதி தேவையில்லை என்பது பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையின் மூலம் மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொது தகவல்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்: அதில்–

''நான் சமூக செயல்பாட்டாளர். நான் வசிக்கும் சென்னை–600 033, மேற்கு மாம்பலம், ஆரிய கௌவுடா தெரு, கதவு எண்.108 என்ற முகவரியில் VIJAYA COMPLEX என்ற வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு பார்கிங் வசதி செய்யப்படவில்லை. இக்கட்டிடத்தின் முன் தரைதளத்தில் மேற்கு மாம்பலம் வெங்கடேஸ்வரா போளி சென்டர் என்ற ஓட்டல் துவக்கப்பட்டது. இவ்ஹோட்டல் கட்டிடம் அருகே அயோத்தியா மண்டபம் என்ற இந்து கோவிலும் வலது புறத்தில் சாய்பாபா கோவிலும் சுமார் 20 மீட்டர் தொலைவில் அஞ்சுகம் அரசு மேல்நிலைப்பள்ளி, சீத்தாராமன் வித்யாலாயா பள்ளி, G.R.T தனியார் பள்ளிகள் உள்ளது. அதிக போக்குவரத்து உள்ள இச்சாலையில் பார்க்கிங் வசதிகள் இல்லாமல் இவ் ஹோட்டல் துவக்கப்பட்டதால் அங்கு வரும் வாடிக்கையாளர்கள் நடைபாதையிலும் சாலையிலும் வரிசையாக 100க்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இது குறித்து புகார் அளிக்கப்பட்டு No Parking Board அமைக்கப்பட்டது. இவ்ஹோட்டல் முறையான உரிமம் பெறாமல் இயங்கி வருகிறது.

ஆகவே சட்ட விதிமுறைகளை மீறி இயங்கும் வணிகவளாக கட்டிடத்தை இடித்து parking வசதிகள், தீ அணைப்பு கருவிகள் பொருத்தும்படியும் மேலும், Lock & Seal செய்யவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவிப் பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர். அதில் –

''மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கடை உரிமையாளருக்கு கடையில் உரிய வாகன நிறுத்தம் ஏற்படுத்துமாறும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தாமலும் நடைபாதையில் வாகனங்கள் ஏதும் நிறுத்தாமல் இருக்க வழிவகை செய்யுமாறும், தவறும்பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் வாகனங்கள் நிறுத்துவதை தடுப்பதற்காக அங்கு காவல்துறையின் அறிவுரையின்படி No Parking Board நிறுவினர். மேலும் அங்கு வாகன நிறுத்தம் செய்வதை ஒழுங்குபடுத்தும் வகையில் இரு Securityகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், வெங்கடேஸ்வரா போளி ஸ்டால், "S.M.Stall" என்ற வகைப்பாட்டின் கீழ் உரிமம் எண்.10–134–0000133 பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வகையான S.M.Stall கடைகளுக்கு வாகனம் நிறுத்தம் தேவையில்லை.

இதுகுறித்து தகுந்த நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் சென்னை–600 033, மேற்கு மாம்பலம், ஆரிய கௌவுடா தெரு, கதவு எண்.108 என்ற முகவரியில் கட்டப்பட்ட VIJAYA COMPLEX என்ற வணிக வளாக கட்டிடத்தில் இயங்கும் வெங்கடேஸ்வரா போளி சென்டருக்கு பார்கிங் வசதி இல்லை எனவும், அதன் அருகே அயோத்தியா மண்டபம் என்ற இந்து கோவில், வலது புறத்தில் சாய்பாபா கோவில் 20 மீட்டர் தொலைவில் அஞ்சுகம் அரசு மேல்நிலைப்பள்ளி, சீத்தாராமன் வித்யாலாயா பள்ளி, G.R.T தனியார் பள்ளி ஆகியன உள்ளதால், அதிக போக்குவரத்து உள்ள இச்சாலையில் பார்க்கிங் வசதிகள் இல்லாத மேற்கண்ட ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் சாலையின் நடைபாதையில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், இவ்ஹோட்டல் முறையான உரிமம் பெறாமல் இயங்கி வருவதாகவும், ஆகவே சட்ட விதிமுறைகளை மீறி இயங்கும் வணிகவளாக கட்டிடத்தை இடித்து parking வசதிகள், தீ அணைப்பு கருவிகள் பொருத்தாமல் உள்ள இக்கட்டிடத்தை Lock & Seal செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் கோரியிருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கடை உரிமையாளருக்கு கடையில் உரிய வாகன நிறுத்தம் ஏற்படுத்துமாறும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தாமலும் நடைபாதையில் வாகனங்கள் ஏதும் நிறுத்தாமல் இருக்க வழிவகை செய்யுமாறும், தவறும்பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்பட்டது எனவும், கட்டிட உரிமையாளர் வாகனங்கள் நிறுத்துவதை தடுப்பதற்காக அங்கு காவல்துறையின் அறிவுரையின்படி No Parking Board நிறுவப்பட்டும், அங்கு வாகன நிறுத்தம் செய்வதை ஒழுங்குபடுத்தும் வகையில் இரு Securityகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவும், வெங்கடேஸ்வரா போளி ஸ்டால், "S.M.Stall" என்ற வகைப்பாட்டின் கீழ் உரிமம் எண்.10–134–0000133 பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது எனவும், எனவே, இவ்வகையான "S.M.Stall" கடைகளுக்கு வாகனம் நிறுத்த இடம் தேவையில்லை எனவும், இதுகுறித்து தகுந்த நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வில், தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, அத்தியாயம் IX, உரிமங்கள், பகுதி I, பிரிவு 289 குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள், குறிப்பாக பிரிவு 289 (6) (a)–ன்படி பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும், போக்குவரத்து காவல் துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உரிய உத்தரவினை வழங்குமாறு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.